லோக்சபை) தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ளதால் தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை உறுப்பினர் பதவியினின்றும் 18–1–1980 முதல் விலகிக் கொண்டுள்ளார் என்றும் அரசியலமைப்புச் சட்டத்தின் 190-வது பிரிவு 3 (பி) உட்பிரிவின்படி அப் பதவி விலகல் அத் தேதியிலிருந்து என்னால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

6. அரசினர் சட்ட முன்வடிவு

(அ) இந்திய மின்சார (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, 1980 ஆம் ஆண்டு இந்திய மின்சார (தமிழ்நாடு) திருத்த சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்ற பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : இச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

[முற்பகல் 10–30]

7. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்

திரு பி. எச். பாண்டியன் : பேரவைத் தலைவர் அவர்களே, "ஆளுநர் அவர்களுக்கு கீழ்க்கண்ட நன்றியுரை அளிக்கப் பெற வேண்டும் :—

'1980—ஆம் ஆண்டு, சனவரி திங்கள் 30 ஆம் தேதியன்று இரு அவைகளும் சேர்ந்த சட்டமன்றக் கூட்டத்தில் ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்''.
என்ற தீர்மானத்தை மொழிகிறேன்.

திரு வ. மு. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு பி. எச். பாண்டியன் அவர்கள் மொழிந்த தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்

255-262-ம் பக்கங்களில் ஆளுநர் உரை இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது. அதன் தமிழாக்கம் 263-272-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பெற்றுள்ளது.